**ஜனவரி – 01 – ஞாயிறு**

**புதுவருடப் பிறப்பு**

**தூய அன்னை மரியா இறைவனின் தாய் - பெருவிழா**

**'கடவுளை போற்றி புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பி சென்றனர்'**
**(லூக் 2:20)**

**முதல்வாசகம்: எண்ணாகமம் 5: 22 – 27**

ஆண்டவர் மோசேயிடம் கூறியது: சாபத்தைக் கொண்டு வரும் இந்த நீர் உன் குடல்களில் இறங்கி உன் வயிற்றை வீங்கச் செய்து உன் தொடைகளை அழுகி விழச் செய்யட்டும்' என்பார். அதற்கு அப்பெண் 'ஆமென், ஆமென்' என்பாள். பின்னர் குரு இச்சாபங்களை ஓர் ஏட்டில் எழுதிக் கசப்பு நீரால் அவற்றை அழித்து விடுவார்;. சாபத்தைக் கொண்டுவரும் அக் கசப்பு நீரை அப்பெண் குடிக்கச் செய்வார்; சாபத்தைக் கொண்டு வரும் அந்நீர் அவளுக்குள் சென்று கொடிய வேதனையை உண்டாக்கும். குரு வெஞ்சினத்தின் உணவுப்படையலைப் பெண்ணின் கையிலிருந்து வாங்கி அதை ஆண்டவர் முன்னிலையில் ஆரத்தியாகக் காட்டிப் பலிபீடத்துக்குக் கொண்டு வருவார். குரு அந்த உணவுப் படையிலிலிருந்து அதன் நினைவுப் பகுதியாக ஒரு கைப்பிடி எடுத்து அதனைப் பீடத்தின் மேல் எரித்து விடுவார்; இறுதியாக அப்பெண், அந்நீரைக் குடிக்கச் செய்வான். அவன் அவளை நீர் குடிக்கச் செய்யும்போது அவள் உண்மையிலேயே தன்னைக் கறைப்படுத்தித் தன் கணவனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்திருந்தால் சாபத்தைக் கொண்டுவரும் நீர் அவளுக்குள் போய் கொடிய வேதனையை உண்டாக்கும்; அவள் வயிறு வீங்கி, தொடைகள் அழுகிவிடும்; அவள் தன் மக்களிடையே ஒரு சாபமாக இருப்பாள்.

**பதில்பாடல் : திருப்பாடல்67:2-3.5,6,8**

கடவுளே எமக்கு இரங்கி எம்மீது ஆசி வழங்குவீராக.

**இரண்டாம் வாசகம்: கலாத்தியர் 4:4 – 7**
சகோதர சகோதரிகளே, ஆனால் காலம் நிறைவேறியபோது திருச்சட்டத்திற்கு உட்பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும் திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார். நீங்கள் பிள்ளைகளாய் இருப்பதால் கடவுள் தம் மகனின் ஆவியை உங்கள் உள்ளங்களுக்குள் அனுப்பியுள்ளார்; அந்த ஆவி 'அப்பா, தந்தையே' எனக் கூப்பிடுகிறது. ஆகையால் இனி நீங்கள் அடிமைகளல்ல் பிள்ளைகள்தாம்; பிள்ளைகளாகவும் உரிமைப்பேறு உடையவர்களாகவும் இருக்கிறீர்கள். இது கடவுளின் செயலே.

**நற்செய்தி: லூக்கா2:16-21**

அப்பொழுது இடையர்கள் விரைந்து சென்று மரியாவையும் யோசேப்பையும் தீவனத் தொட்டியில் கிடத்தியிருந்த குழந்தையையும்; கண்டார்கள். பின்பு அந்தக் குழந்தையைப் பற்றித் தங்களுக்குச் சொல்லப்பட்ட செய்தியைத் தெரிவித்தார்கள். அதைக் கேட்ட யாவரும், இடையர்கள் தங்களுக்குச் சொன்ன வற்றைக் குறித்து வியப்படைந்தனர். ஆனால் மரியா இந்நிகழ்ச்சி களையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார். இடையர்கள் தாங்கள் கேட்டவை, கண்டவை அனைத்தையும் குறித்துக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்து பாடிக்கொண்டே திரும்பிச் சென்றார்கள். அவர்களுக்குச் சொல்லப் பட்டவாறு எல்லாம் நிகழ்ந்திருந்தது. குழந்தைக்கு விருத்தசேதனம் செய்ய வேண்டிய எட்டாம் நாள் வந்தது. தாயின் வயிற்றில் உருவாகுமுன்பே வானதூதர் சொல்லியிருந்தவாறு அதற்கு இயேசு என்று பெயரிட்டார்கள்.

**தியானம்:** அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள். பிறந்திருக்கும் இப்புதிய வருடம் எல்லோருக்கும் மன மகிழ்வையும், உற்சாகத்தையும் தர வேண்டுவோம். பழையன எல்லாம் மறக்கப்பட்டு, புதிய உறவும் நட்பும் தழைத்தோங்கட்டும். கடந்து வந்த கசப்பான வேதனையான நாட்களை நினைத்துப் பார்ப்போம். இழப்பின் காலம் உண்டு, கண்ணீரின் காலம் உண்டு, வேதனையின் காலம் உண்டு, ஏமாற்றத்தின் காலம் உண்டு, நோயினால் வருந்திய காலம் உண்டு, உறவுகளால் நிராகரிக்கப்பட்ட காலம் உண்டு. அந்த நேரங்களில் எல்லாம் இறைவன் எவ்வாறு கூட இருந்து எம்மை வழிநடத்தினார் என்பதை எம்மால் உணர முடியும். அதற்காக நாம் இறைவனுக்கு நன்றி சொல்வோம். தொடர்ந்தும் அவ்வாறே நம்மை பாதுகாத்து வழிநடத்துவாராக. இன்றைய முதல் வாசகத்தில் கூறப்பட்டதுபோல் கடவுள் நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆசி வழங்குவாராக. இறைமகனின் பிறப்பு வரலாற்றிலே, ஏழை இடையருக்கும் பெரும் பங்குண்டு. யேசுவின் பிறப்பு முதலில் அவர்களுக்குத்தான் அறிவிக்கப் பட்டது, யேசுவை முதலில் கண்டவர்களும் வணங்கியவர்களும் அவர்களே. ஏழ்மையின் கோலம் பூண்டவர், தமது பிறப்பையும் ஏழைகளுக்கே வெளிப்படுத்தினார். தமது வரவு யாருக்காக என்பதை அன்றே அவர் காட்டினார். அரசருக்கும், தலைவர்களுக்கும் எதிரியாக, விரோதியாகப் பார்க்கப்பட்ட யேசு ஏழைகளின் நண்பனானார். அவர்களின் கண்ணீர் துடைக்கும் தோழனாகவும், நோய்களை நீக்கும் மருத்துவனாகவும், நல்ல நீதிபதியாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டார். எனவே அவரின் பிறப்பும் நம் அனைவருக்கும் மன நிறைவை தரட்டும்.